# இறப்பர் மீள் நடுகை உதவு தொகை நிதியம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறப்பர் மீள் நடுகை உதவு தொகை நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் அதாவது காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது பொது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் கட்டணங்களாக ரூபா 71,200 தொகை நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தும் இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் இறுதிக் கணக்குகளில் அவ்வாறான கொடுக்கல் வாங்கல் ஒன்று நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறப்பர் மீள் நடுகை நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 63,438,233 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக இனங்காணப்படாதிருந்ததுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத இச் சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 991,102 தொகை பெறுமானத் தேய்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

நீண்டகாலமாக முன்கொண்டுவரப்பட்ட பின்வரும் விடயங்களை அவற்றிற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள எழுத்துமூலச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி/ மெய்மையாய்வு செய்வதற்கோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 63,438,233 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை, நிலையான சொத்துக்கள் பதிவேடு, காணி உறுதி என்பன |
| தீர்த்துவைக்கப்படாத முற்பணங்கள் | 15,220,514 | விபரமான பட்டோலையும் மீதிகளை உறுதிப்படுத்தல்களும் |
| பெறவேண்டிய மீதி | 432,090,074 | தொடக்க ஆவணங்கள் மீதிகளை உறுதிப்படுத்துதல் என்பன. |
| செலுத்த வேண்டிய மீதி | 32,179,804 | விபரமான பட்டோலையும் மீதி உறுதிப்படுத்தல்களும் |
| மொத்தம் | 542,928,625 | |

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 432,090,074 தொகையான 13 மீதிகள் 7 ஆண்டுகளாக இனங்காணப்பட்டு தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 32,179,804 பெறுமதியான 14 பொறுப்பு விடயங்கள் 06 ஆண்டு காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இப் பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1. நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் ரூபா 392,390 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதுடன் முன்னைய ஆண்டில் அது ரூபா 131,822 ஆக இருந்ததனால் பற்றாக்குறையில் அதிகரிப்பு ரூபா 261,068 ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதியத்தின் மொத்த வருமானம் முதலீட்டு வட்டி வருமானத்தினை மாத்திரம் உள்ளடக்கியிருந்ததுடன் அது ரூபா 598,712 ஆக இருந்தது.

### 2.2 செயலாற்றல்

### 2.2.1 நிதியம் நிலைத்திருத்தல்

செயற்படுகின்ற நிலையில் இல்லாத இந்த நிதியத்தினைக் கலைக்கும் வகையில் உரிய அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கில் காட்டப்பட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தீர்த்துவைத்து அதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென அரசாங்க நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 2011 ஒக்டோபர் 21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த அறிக்கைத் திகதி வரையும் அந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 நிதியத்தின் முகாமைத்துவம்

பல ஆண்டுகளாக மாற்றமின்றி முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 6,953,782 தொகையான வைப்புக்களில் முதலீடு செய்த பணம், உரிய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான அங்கீகாரத்துடன் செயற்திறனாக முதலீடு செய்தல் என்பன தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. பாதீட்டுக் கட்டுப்பாடு**

இறப்பர் மீள் நடுகை உதவி நிதியத்தின் கீழ் வருடாந்தம் செலவு செய்தல் இடம்பெறவில்லை என்பதனால் மீளாய்வாண்டு தொடர்பாக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முற்பணங்களைத் தீர்த்துவைத்தல்
(இ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) நிலையான சொத்துக்கள்